6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

58. 2019 ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழும விதிகளை இயற்றியது குறித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (நவ3(2)) துறையின் 16-1-2019 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 11-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2010 ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 45/2010) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

59. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 29-1-2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 14-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

60. 11-6-2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு-2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/519(a)/2018 ஆம் எண் அறிவிக்கைக்கு பதிலாக, தமிழ்நாடு முன் தீர்வுக்கான அதிகார அமைப்பினை அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு ஏற்படுத்தியது குறித்து 3-6-2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 68-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

61. (i) 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இடர்பாடுகளை இரண்டாவது முறையாக நீக்குதல்) ஆணையினை இயற்றியது குறித்து 31-12-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 157-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ii) 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இடர்பாடுகளை மூன்றாவது முறையாக நீக்குதல்) ஆணையினை இயற்றியது குறித்து 31-12-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1)

துறையின் அரசாணை (நிலை) எண் 158-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (iii) 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இடர்பாடுகளை நான்காவது முறையாக நீக்குதல்) ஆணையினை இயற்றியது குறித்து 31-12-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 159-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (iv) எந்த ஒரு பதிவு பெற்ற நபராலும் 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) பிரிவு 47-ன்கீழ் உரிய நாளுக்குப் பின்னர் 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்கான கணக்கு விவரங்களை படிவம் GSTR-3B-ல் அளிக்கத் தவறியதற்காக, அளிக்கத் தவறும் காலத்தின்போது, தாமதமாகவும் ஒவ்வொரு நாளுக்காகவும் இருபத்து ஐந்து ரூபாய் என செலுத்தப்பட வேண்டிய தாமதக் கட்டணத்தை தள்ளுபடி செய்தது குறித்து 31-12-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 165-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (v) அயல்நாடு வர்த்தக கொள்கையின் 4.41-வது பத்தி மற்றும் நடைமுறை கையேட்டின் 4-வது அத்தியாயத்தில் அதற்குரிய விதிமுறைகளின்படி பதிவு பெற்ற ஒரு நபருக்கு குறித்துரைக்கப்பட்டவாறு பரிந்துரைக்கப்பட்ட முகமையால் வழங்கப்படலுக்கு நேரான ஏற்றுமதிக்கான திட்டத்தின்கீழ் பரிந்துரைக்கப்பட்ட முகமையால் வழங்கப்படும்போது 1975 ஆம் ஆண்டு சுங்கக் கட்டண சட்டத்தின் (மத்திய சட்டம் 51/1975) முதலாவது அட்டவணையின் 7108 ஆம் தலைப்பின்கீழ் வருகின்ற தங்கத்தை மாநிலத்திற்குள்ளேயே வழங்குவதில் 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) பிரிவு 9-ன்கீழ் விதிக்கத்தக்க மாநில வரியிலிருந்து, அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, விலக்களித்தது குறித்து 31-12-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 169-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (vi) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கத்தினை 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு-2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-14)/2017 ஆம் எண் அறிவிக்கையில் சேர்த்தது குறித்து 31-12-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 173-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (vii) 6-8-2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு-2-ல் வெளியிடப்பட்ட

வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/695(d-2)/2018 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 31-12-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 160-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (viii) 10-9-2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு-2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/800(e)/2018 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 31-12-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 161-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ix) 13-9-2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு-2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/823 (a-1)/2018 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 31-12-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 162-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (x) 23-1-2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு-2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/79(h-1)/2018 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 31-12-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 164-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (xi) 29-12-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு-2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/1041 (d-2)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 31-12-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 166-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (xii) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு-2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-4)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 31-12-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 167-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (xiii) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு-2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-5)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 31-12-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 168-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை;

(xiv) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு-2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-14)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 31-12-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 170-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (xv) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு-2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-15)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 31-12-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 171-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (xvi) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு-2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-16)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 31-12-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 172-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

62. (i) 18-1-2019 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு-2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/868(f-2)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 18-1-2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 6-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ii) 28-1-2019 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/57(b)/2019 ஆம் எண் அறிவிக்கைக்கு பிழைத்திருத்தம் செய்தது குறித்து 25-1-2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 10-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (iii) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு-2-ல், வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-11)/2017 ஆம் எண் அறிவிக்கையை தள்ளுபடி செய்தது குறித்து 29-1-2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை)

எண்12-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (iv) பிரிவு 8-ன் கூறு (2), பிரிவு 17, பிரிவு 18, பிரிவு 20-ன் கூறு (1) ஆகியவை தவிர்த்து, 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தம்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/2019) விதித் துறைகள் 1-2-2019 அன்று முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து 29-1-2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1)துறையின் அரசாணை (நிலை) எண் 13-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (v) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு-2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-1)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 29-1-2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 15-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (vi) 15-11-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு-2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/935(b-3)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 29-1-2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 16-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (vii) 31-12-2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/1099(e-5)/2018 ஆம் எண் அறிவிக்கைக்கு பிழைத்திருத்தம் செய்தது குறித்து 1-2-2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 19-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (viii) 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இடர்பாடுகளை களைதல்) ஆணையினை இயற்றியது குறித்து 1-2-2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 20-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ix) 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாவது இடர்பாட்டினைக் களைதல்) ஆணையினை இயற்றியது குறித்து 1-2-2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 22-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (x) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இவ்விரண்டின் வழங்கல்கள் மீதான மாநில வரியானது, அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தில் விதிக்கப்படும் என குறிப்பிட்டது குறித்து 7-3-2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 32-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (xi)

அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை 2017 ஆம் ஆண்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் (தமிழ்நாடு சட்டம் 19/2017) சட்டத்தின்கீழ் பதிவு செய்வதிலிருந்து விலக்களிப்பட்ட நபர்களின் வகையினராக அறிவித்தது குறித்து 7-3-2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 33-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (xii) முந்தைய நிதி ஆண்டு அல்லது நடப்பு நிதியாண்டில் மொத்த வியாபாரத் தொகை ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் வரை கொண்ட பதிவு பெற்ற நபர்கள், சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இவையிரண்டின் வெளியீட்டு வழங்கல்களின் வழங்கும் விவரங்களை அளிப்பதற்கு அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள சிறப்பு நடைமுறைகளை பின்பற்றுவது குறித்து 7-3-2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 34-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (xiii) முந்தைய நிதி ஆண்டில் மொத்த வியாபாரத் தொகை ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் வரை கொண்ட பதிவுபெற்ற நபர்கள், 2017 ஆம் ஆண்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் (தமிழ்நாடு சட்டம் 19/2017) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் உட்பிரிவு (1)-ன்கீழ் செலுத்தத்தக்க வரித் தொகைக்கு பதிலாக 2017 ஆம் ஆண்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதி 7-ன்கீழ், வரையறை செய்யப்பட்ட வரித் தொகையை செலுத்த விருப்புரிமை பெற்றவராவர் என அறிவித்தது குறித்து 7-3-2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 35-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (xiv) 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (மூன்றாம் முறையாக குறைகளை நீக்குதல்) ஆணையினை இயற்றியது குறித்து 8-3-2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 36-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

63. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறையின் 23-8-2018 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 112-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2019 ஜூலை 19]

64. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(எம்) துறையின் *8-1-2019* ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் *3*-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் *320*(*5*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

65. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறையின் *21-2-2019* ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் *14*-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் *320*(*5*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

66. 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்-ஆங்கிலம்)

67. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்-ஆங்கிலம்)

68. 2015-2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்-ஆங்கிலம்)

69. 2017-2018 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்-ஆங்கிலம்)

70. 2017-2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் நாற்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*)

619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

71. 2017-2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் அறுபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்-ஆங்கிலம்)

72. 2017-2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிமென்ட்ஸ் நிறுவனத்தின் நாற்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்-ஆங்கிலம்)

73. 2017-2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்-ஆங்கிலம்)

74. 2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆண்டறிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) 25(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

199. 2016-2017 ஆம் ஆண்டிற்கான சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஆண்டுக் கணக்குகள்-தணிக்கை அறிக்கை. (தமிழ்)

200. மானியக் கோரிக்கை எண் 22-காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2019-2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

201. மானியக் கோரிக்கை எண் 23-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2019-2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

202. மானியக் கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2019-2020. (ஆங்கிலம்)